Office of the HEALTH OMBUDSMAN

Listen. Respond. Resolve.

www.oho.qld.gov.au | 133 OHO (133 646)

ஏப்ரல் 2015

# புகார்களை விசாரிக்கும் சுகாதார அதிகாரியின் அலுவலகம்

புகார்களை விசாரிக்கும் சுகாதார அதிகாரியின் அலுவலகம் என்பது குயீன்ஸ்லேண்டின் சுகாதார சேவை முறைப்பாட்டு முகமை ஆகும். புகார்களை விசாரிக்கும் சுகாதார அதிகாரியின் அலுவலகம் என்பது குயீன்ஸ்லேண்டின் சுகாதார சேவை முறைப்பாட்டு முகமை ஆகும்.

## எங்கள் தூரநோக்கு

குயீன்ஸ்லேண்டில் முறைப்பாடுகள் மற்றும் பிற உடல்நலக் கவனிப்பு விடயங்களை வினைத்திறனாகவும் விரைவாகவும் கையாளுவதற்காக ஒரு ஒளிவு மறைவில்லாத, பதில் சொல்லும் பொறுப்புள்ள மற்றும் நேர்மையான அமைப்பின் அடித்தளமாக இருப்பதாகும்.

## எங்கள் மதிப்புகள்

- பொதுமக்களின் சுகாதாரமும் பாதுகாப்பும் ஒப்புயர்வற்றவை என்று நம்புகிறோம்.
- நாங்கள் சுதந்திரமாக, பாரபட்சமின்றி மற்றும் பொதுமக்களின் அக்கறையில் செயற்படுகிறோம்.
- நாங்கள் மக்களை நேர்மையாகவும் சமமாகவும் நடத்துகிறோம்.
- நாங்கள் முறைப்பாடுகளுக்கு சரியான நேரத்தில் பதிலளிக்கிறோம். எங்களால் உதவிசெய்ய முடியாவிட்டால், ஏன் என்பதை விளக்குகிறோம் மற்றும் சாத்தியமாயின், பிற தெரிவுகளைப் பரிந்துரைக்கிறோம்.
- நாங்கள் சரியான நேரத்தில், உயர் தரமான பணியை வழங்குகிறோம்.
- நாங்கள் எங்கள் சேவையை மேம்படுத்துவதற்கு, எங்கள் திறனை வளர்க்கிறோம் மற்றும் புத்தாக்கமான செயலாக்கங்களைப் பயன்படுத்துகிறோம்.

### எங்கள் பொறுப்பு:

நாங்கள் குயீன்ஸ்லேண்டில் உயர் தரமான முறைப்பாடுகளைக் கையாளுதல், தீர்வை மறுத்துரைத்தல், சமரசம் மற்றும் புலனாய்வுச் சேவைகள் ஆகியவற்றை வழங்கப் பொறுப்பேற்றுள்ளோம். இவ்வாறு செய்வதில், நாங்கள் நேர்மையாக, பாரபட்சமின்றி மற்றும் சுதந்திரமாகச் செயற்படுகிறோம்; நன்கு தகவலளிக்கப்பட்ட முடிவுகளை எடுக்கிறோம் மற்றும் முறைப்பாடுகளுக்கு, சுகாதார சேவை வழங்குநர்களுக்கு மற்றும் பிற பங்குதாரர்களுக்கு துல்லியமான ஆலோசனையை வழங்குகிறோம்.

## எங்கள் பணி

- பொதுமக்களின் சுகாதாரத்தையும் பாதுகாப்பையும் பாதுகாப்பது.
- உடல்நல மருத்துவர்கள் மூலம் நிபுணத்துவ, பாதுகாப்பான மற்றும் தகுதியுள்ள நடைமுறையை முன்னேற்றுவது.
- சுகாதார சேவை நிறுவனங்கள் மூலம் உயர் தரங்களிலுள்ள சேவை வழங்கலை முன்னேற்றுவது.
- சுகாதார முறைப்பாடுகள் மற்றும் சுகாதார சேவைகளை வழங்குதலுடன் தொடர்பான பிற விடயங்களின் நிர்வாகத்தில் பொதுமக்களின் நம்பிக்கையைப் பேணுவது.

## எங்கள் செயல்பாடுகள்

- பதிவுசெய்த மற்றும் பதிவுசெய்யாத உடல்நல மருத்துவர்கள் உட்பட, சுகாதார சேவைகள் மற்றும் சுகாதார சேவை வழங்குநர்கள் பற்றிய முறைப்பாடுகளைப் பெறுவது மற்றும் விசாரணை நடத்துவது.
- அந்த முறைப்பாடுகளுடன் தொடர்பாக என்ன நடவடிக்கையை எடுப்பதென முடிவு செய்வது, மேலும் சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில், பொதுமக்களின் பாதுகாப்பைப் பாதுகாப்பதற்கு உடனடி நடவடிக்கையை எடுப்பது.
- ஆஸ்திரேலிய உடல்நல மருத்துவர் ஒழுங்குமுறை முகமை மற்றும் தேசிய உடல்நல மருத்துவர் வாரியங்கள் போன்றவற்றின் சுகாதாரம், நடத்தை மற்றும் செயல்திறன் செயல்பாடுகளைக் கண்காணிப்பது
- சுகாதார சேவை முறைப்பாடுகளைக் குறைத்தல் மற்றும் தீர்த்துவைத்தல் பற்றிய தகவலை வழங்குவது.
- எங்கள் செயல்பாடுகளின் செயல்திறன் பற்றி வெளிப்படையாகத் தெரிவிப்பது.

### மேலும் தகவல்

| | |
|---|---|
| இதைப் பார்க்கவும்: | www.oho.qld.gov.au |
| மின்னஞ்சல்: | info@oho.qld.gov.au |
| தொலைபேசி: | 133 OHO (133 646) |
| இதற்கு எழுதவும்: | PO Box 13281 George Street Brisbane Qld 4003 |